# பள்ளு நாடகங்கள்



கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை

**நா**ட்டார் பாடல்களுள் ஒன்றான "பள்ளு", எழுதப்பெற்ற இலக்கிய வடிவமாக மட்டுமன்றி ஆடப்பெற்ற நாடகவடிவமாகவும் உள்ளது. பள்ளத்தில் வயல் வேலை செய்யும் தொழிலாளர்களுள் ஒரு பிருவினரைப் பள்ளர், பள்ளியர் என அழைத்தனர். பள்ளர், பள்ளியர் வயற்றொழில் செய்யும் பொழுது பாடிவந்த பாடல்கள் பள்ளுப்பாடல் எனப் பெயர் பெற்றன. வடஇலங்கை முழுவதிலும் பள்ளுப் பாடல்கள் மிக அண்மைக்காலம் வரை அடிநிலை மக்கள் நிலையிற் பாடப்பட்டும் ஆடப்பட்டும் வந்தன.

"முல்லைத்தீவுப் பகுதியில் வேலையாட்கள் கூட்டமாகச் சென்று அரிவி வெட்டும் நேரத்தில் மத்தள தாளங்களுடன் இப்பாட்டுகள் படிக்கப்படுகின்றன. ஒரு நிரையாயிருந்து அரிவி வெட்டுபவர்களுள் ஒருவன் மற்றவர்களுடன் நிரைகொள்வது பிந்திவிட்டால் மத்தளம் அவன் முதுகில் வைத்து அடிக்கப்பட மற்றவர்கள் பார்த்துப் பரிகாசம் செய்து நகைப்பார்கள். இதைத் தவிர்ப்பதற்காக எல்லாரும் அதிதீவிரமாய் வேலை செய்து நாலு மணித்தியாலத்திற் செய்து முடிப்பார்களாம்." எனக்கூறுவர் குமாரசாமி.

முல்லைத்தீவில் கூலி பெறாது அரிவி வெட்டுதலைப் பரத்தை வெட்டுதல் என்பர். ஆனால் சொந்தக்காரன் அரிவி வெட்டுவோருக்கு உணவும் பானமும்வழங்குவான். பரத்தை வெட்டத் தொடங்குவதற்கு முன்னர் வயற் சொந்தக்காரனை அலங்கரித்துத் தண்டிகையொன்றிலேற்றி ஊர்- வலமாக அழைத்துவருவர். அழைத்து வரும் பொழுது வயலில் வேலை செய்யும் உழவர் உழத்தியர் ஆகியோர் பள்ளுப் பாடல்களைப் பாடியாடிய வண்ணம் வருவர். பரத்தை வெட்ட வேண்டிய வயல் வந்ததும் கமக்காரனைத் தண்டிகையிலிருந்து இறக்கிப் பின்னர், அரிவி வெட்டத் தொடங்குவர். கமக்காரனை அழைத்து வருதல், ஆடுதல், பாடுதல் ஆகிய நிகழ்ச்சிகள் நாடகத்தன்மை பொருந்தியனவாகும்.

**கலாநிதி**
**காரை. செ. சுந்தரம்பிள்ளை**

விசயநகர மன்னர் ஆட்சிக்காலம், சமுதாயத்திலே சாதிப் பிரிவுகளும், சமயப் போராட்டங்களும், உச்சகட்டத்தை அடைந்த காலமாகும். அவற்றின் தாக்கத்தினால் மக்கள் துன்பமும், துயரமுமடைந்த பொழுது அவர்களது உள்ளக்குமுறல்களையும் விரும்பு வெறுப்புக்களையும் வெளிப்படுத்தும் கருவிகளாகக் குறவஞ்சியும், பள்ளும் புலவர்களாற் படைக்கப்பட்டன, என்பர் மகாலிங்கம்.

பள்ளுப் பாடல்கள் மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையன. விசய நகர மன்னர் காலத்திற் பொதுமக்கள் வாழ்க்கையை எடுத்துக்கூறும் மரபு 'பள்ளு', 'குறவஞ்சி', 'நொண்டிநாடகம்' ஆகியவற்றில் இலக்கிய உருவம் பெற்று, அம்மரபின் ஒரு வெளிப்பாடே கூத்து நூல்களின் தோற்றம் என்பர் பேராசிரியர் வித்தியானந்தன். கூத்து வடிவம் பெற்றபின்னரே கூத்து நூல்கள் எழுவது இயல்பு. ஆதலின் பள்ளுப் பிரபந்தங்கள் தோன்றுவதற்கு முன்னரே, பள்ளுப் பாடல்கள், பாடியாடப்பட்டு வந்திருக்கின்றன எனலாம்.

உழவர், உழத்தியர் குடும்பச் சூழலை வியக்கும் வகையில் முக்கூடற்பள்ளு, திருமலை முருகன் பள்ளு, திருவாரூர்ப்பள்ளு, குருகூர்ப்பள்ளு முதலியன தென்னகத்திலே தோன்றின. ஈழத்திலும் கதிரமலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, ஞானப்பள்ளு என்பன தோன்றின. பள்ளுப் பிரபந்தங்களுள் காலத்தால் முந்தியது "கதிரை மலைப் பள்ளு" என்பர்.

மாலிக்கபூர் என்பவனுடைய தலைமையில் முஸ்லீம் படையெடுப்பொன்று பதினான்காம் நூற்றாண்டிலே தென்னகத்தில் நடைபெற்றது. இப்படையெடுப்பினால், தென்னகம் பெரிதும் பாதிப்படைந்து. கொலைகளும், கொள்ளைகளும் இடம் பெற்றன. இந்துக்கோயில்கள் பல இடிக்கப்பட்டன. கோயிற் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. கோயிலை நம்பி வாழ்ந்த தேவதாசியர், நாடக மாந்தர்கள், நடனக்கலைஞர், இசைக்

கலைஞர் ஆதியோர் தொழில்களை இழந்தனர். கிட்டத்தட்ட ஒரு நூற்றண்டு காலம் அடுக்கடி படையெடுப்புகளும், சண்டைகளும் தென்னகத்தை அமைதியிழக்கச் செய்தன.

இத்தகைய சூழ்நிலையில், தமிழகத்தை விட்டுப் பலர் குடிபெயரத் தொடங்கினர். அவ்வாறு குடிபெயர்ந்தவர்களுள் ஒரு பகுதியினர் ஈழத்துக்கு வந்து நிரந்தரமாக வாழத்தலைப்பட்டனர். அவ்வாறு வந்தபல சாதியினருள் ஏராளர் எனப்படும் பள்ளரும் அடங்குவர். இவர்கள் தாம் குடியேறிய இடங்களி- லெல்லாம் பள்ளு நாடகத்தையும் ஆடி வந்தனர் எனப் புலப்படுறது.

இந்த ஆய்வுக்கென மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வட இலங்கையில் ஐந்து இடங்களிற் பள்ளு நாடகம் ஆடப்பட்டதாகத் தெரிய வந்திருக்கிறது. அந்த இடங்களாவன:-

1. முல்லைத்தீவு
2. காரைநகர்,
3. ஆவரங்கால்
4. அல்வாய்
5. மாதகல்

இந்த இடங்களில் ஆடப்பட்ட பள்ளு நாடகங்கள் பற்றி இனி ஆராயப்படும்.

## கதிரைமலைப் பள்ளு

கதிரைமலைப்பள்ளு எனப்படும் பள்ளுப் பிரபந்தத்தைக் கதிரையப்பர் பள்ளு என்றே முல்லைத்தீவினர் அழைக்கின்றனர். கதிரையப்பர் பள்ளு முல்லைத்தீவிற் பல வருடங்களாக நாடகமாக ஆடப்பட்டு வந்திருக்கிறது. உடுக்கடி கதை எவ்வாறு காலப் போக்கில் நாடக வடிவம் பெற்றதோ அவ்வாறே பள்ளுப் பாடல்களும் நாளடைவில் நாடக வடிவம் பெற்றன எனக்கொள்வதே பொருத்தமாகும்.

காரைநகரில் மாதர் எனும் அண்ணாவியாருக்கும், அவருக்குப் பின்னர் அவருடைய மகனாகிய கணக்கர்முருகர் என்பவரும் பள்ளு நாடகத்தைப் பயிற்றி ஆடுவித்துள்ளனர்.

காரைநகரில் முக்குவ சாதியினரும் கூத்தாடுவதிலே தேர்ச்சி மிக்கவர்கள். திமிலர் காவடியாட்டத்தில் வல்லவர்கள். திக்கரையார் சிந்துபாடி வசந்தனாடுவதிற் சிறந்தவர்கள். மேற்படி மூன்று சமூகத்தினரும் சிறப்புடைய கலைஞர்களாயினும் பள்ளிசைத்தாடும் பள்ளர்களுக்கு நிகராகமாட்டார்கள் எனவொரு பாடல் தெரிவிக்கின்றது.

***முக்குவனார் கூத்தும் முதுதிமிலர் காவடியும்***
***திக்கரையார் சிந்தும் சிறப்பேனும் - ஒக்கவே***
***வாரிக் கதிர்வெட்டி வைத்தபின் ஆடுகின்ற***
***ஊரிக்கு நேரோ உரை.***

**(தகவல் - வைத்தீஸ்வரக்குருக்கள்)**

காரைநகரிலுள்ள ஊரி என்னுமிடத்தில் வாழ்பவர்கள் பள்ளர் சமூகத்தினராவர்.

வாரிக்கதிர் வெட்டி வைத்தபின், ஆடுகிற ஆட்டம், பள்ளு' நாடகமே எனத் தமிழறிஞரும், காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய எவ். எக்ஸ். ஸி. நடராசா கூறினார்.

ஆவரங்காலில் ஆடப்பட்டுவந்த பள்ளு நாடகம் 'நொடி நாடகம்' என அழைக்கப்பட்டது. இந்நாடகத்தின் கதையமைப்புப் பின்வருமாறு.

அரசியொருத்தி நொடியொன்றைக் கூறுவாள். அதை எவன் விடுவிக்கிறானோ அவனேதன்னுடைய கணவனாவான் என அறிவிப்பாள். பலர் விடுவிக்க முடியாமல் அவமானப்படுவர். பண்ணையார் மட்டும் தன்னுடைய அன்புக்குரிய ஏராளனின் துணையுடன் புதிரை விடுவித்து வெற்றி கொள்வர். இந்நாடகத்திற் பள்ளன் அறிவுடையோனாகக் காட்டப்படுகிறான்.

அல்வாயில் ஆடப்பட்ட 'பள்ளு' நாடகம் பிரசித்திபெற்றது. கடைசியாக இது 1920 ஆம் ஆண்டு மேடையேறியது. அவ்வூர் வெள்ளாளப் பெருமகன் ஒருவரைக் கேலி செய்வதாக இந் நாடகம் அமைந்த காரணத்தினால், ஏராளர் சமூகத்திற்கும் வெள்ளாளருக்குமிடையிற் சண்டையேற்பட்டது. இச் சண்டையிற் பலர் காயமடைந்தனர். இறுதியில் மணியகாரர், 'பள்ளு நாடகம்' மேடையேறலாகாது எனத் தடைவிதித்து விட்டார்.

மாதகலைச் சேர்ந்த அண்ணாவியார் ஒருவர் கதிரைமலைப் பள்ளில் உள்ள பாடல்களுடன் வேறு பாடல்களையும் சேர்த்து வடமோடி நாடகமாக அதனை ஆடுவித்துள்ளார் எனத் தெரிகிறது.

கதிரைமலைப் பள்ளு என்னும் பிரபந்தத்தைப் பதிப்பித்த குமாரசுவாமி, இப்பள்ளு நூலின் ஏடுகளைத் தேடியலைந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவமொன்றைப் பின்வருமாறு கூறுகின்றார்.

**அல்வாயில் ஆடப்பட்ட 'பள்ளு' நாடகம் பிரசித்திபெற்றது. கடைசியாக இது 1920 ஆம் ஆண்டு மேடையேறியது. அவ்வூர் வெள்ளாளப் பெருமகன் ஒருவரைக் கேலி செய்வதாக இந் நாடகம் அமைந்த காரணத்தினால், ஏராளர் சமூகத்திற்கும் வெள்ளாளருக்குமிடையிற் சண்டை யேற்பட்டது. இச் சண்டையிற் பலர் காயமடைந்தனர். இறுதியில் மணியகாரர், 'பள்ளு நாடகம்' மேடையேறலாகாது எனத் தடைவிதித்து விட்டார்.**

"இந்நூல் ஏட்டுப் பிரதி வைத்திருப்- பவர்களைத் தேடி உசாவித் திரிந்த காலத்தில், மாதகலில் அண்ணாவி (சூத்திரதாரர்) யாக நடிகரைப் பயிற்றும் ஒருவர் என்னைச் சந்தித்துத் தன்னிடமிருக்கும் ஏடே சரியான பள்ளுப் பிரபந்தமென்றும், எனக்குக் கிடைத்த நூல் 'அரிவி வெட்டுப் பாட்டு' என்றும் சொல்லி ஒரு பிரமாண்டமான ஏட்டைக் கொண்டு வந்து காண்பித்தார். அதில் பண்ணைத் தலைவன் அரசனாய்க் கொலுவீற்றிருந்து, பயிரிடுங்குடிகளின் மிருகங்கள் பயிரையழிப்பதாகக் குடிகள் முறையிடப் பண்ணையரசன் வேட்டைக்குப் போதல், மூத்த பள்ளியின் பிரசவத்துக்கு மருத்துவச்சி வருதல், இளைய பள்ளிக்கும் குறத்தி கைபார்த்துக் குறி சொல்லல் முதலிய விலாச உறுப்புகளுடன், விலாசப்பாங்கான தரு, கொச்சகம் முதலிய சேர்க்கப்பட்டு இடையிடையே இந்நூலில் உள்ள செய்யுள்களும் கானப்பட்டன.புதிதாய்ச் சேர்ந்தவர்களும் கதிர்காமத்து முருகவேள் துதியே விரவியிருந்தன. "டிறாமா" மெட்டிலே வேறு நூலிருப்பதாகவும், தன் கையிலிருந்த ஏடே உண்மையான கதிர்காமப் பள்ளு நாடகம் எனவும் வாதாடினார் அண்ணாவியார். மேற்கூறிய வற்றால் இசைப்பாட்டாகவும், நாடகமாகவும் பாமரரால் இந்நூல் இற்றைவரையும் போற்றப்பட்டு வருதல் தேற்றம்" எனக் கூறுகிறார் குமாரசாமி.

குமாரசாமியின் கூற்றிலுருந்து பின்வரும் உண்மைகள் புலனாகின்றண.

1. கதிரைமலைப் பள்ளு நாடகமாகப் பல இடங்களிலும் ஆடப்பட்டு வந்திருக்கிறது.

2. பல வடிவங்களிலும் ஆடப்பட்டுள்ளது. உதாரணமாக 'வடமோடி', 'விலாசம்', "டிறாமா" என்பவற்றைக் கூறலாம்.

3. கதிரைமலைப் பள்ளில் காலத்துக்குக் காலம் இடைச் சொருக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

4. குறத்தி குறிசொல்லும் காட்சியும் சேர்க்கப்பட்டுள்ளதிலிருந்து, குறவஞ்சி நாடகத்தின் செல்வாக்கும் வடஇலங்கை நாடகத்திலிருந்திருக்கிறது.

5. இது நாடகமாக மட்டுமன்றி, இசைப் பாடலாகவும் பாடப்பட்டு வந்துள்ளது.

பள்ளு நாடகத்தை இதுவரை ஆராய்ந்தனவற்றிலிருந்து பின்வரும் கருத்துகள் தெளிவாகின்றன.

1. பள்ளுப் பாடல்கள் ஆரம்பத்தில் வயல்களிற் பாடப்பட்டு வந்தன.

2. பின்னர் அவற்றை உழவரும், உழத்தியரும் பாடியுமாடியும் வந்தனர்.

3. காலப்போக்கில் அவை பிரதேச ரீதியாக, கோயில் பற்றியதாகவும் அமைந்தன. உதாரணமாக முக்கூடற் பள்ளு, திருமலைப் பள்ளு, சீர்காழிப்பள்ளு, கதிரைமலைப் பள்ளு, பறாப்ளை விநாயகர் பள்ளு என்பனவற்றைக் கூறலாம்.

5. ஒவ்வொரு பள்ளுப் பிரபந்தத்திலுங்கூட இரண்டு ஊர்ப்பெயர்கள் அல்லது பிரதேசப் பெயர்கள் சிறப்பித்துக் கூறப்பெறுவதை அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக முக்கூடற்பள்ளில் முக்கூடல் மருதூர் ஆகிய இடங்களும், கதிரைமலைப் பள்ளில் மகாவலிகங்கை, பகீரத கங்கை ஆகிய பகுதிகளும், பறாளை விநாயகர் பள்ளில் சோழமண்டலம், ஈழமண்டலம் ஆகிய பிரதேசங்களும் சிறப்பித்துக் கூறப்பெறுவதைக் காணலாம்.

6. மேலே குறிப்பிட்ட அமைப்பினைப்பெற்று வளர்ச்சியுற்ற பள்ளுப் பிரபந்தங்கள் இன்று புதியதொரு தனித்துவமான இலக்கிய வடிவமாக அமைந்துவிட்டன.

நாடகக் குழு ஒரு குடும்பம் போல் இயங்கவேண்டும்

**பேர்தோல்டின்** (ஜெர்மன் நாடக மேதை)

"பார்வையாளர்கள் தாம் வேறு, நடிகர் வேறு, தாம் நடிகருடன் சேர்ந்து ஒரு சடங்கில் கலந்து கொள்வதைப்போல் நிகழ்ச்சிகளைப் பார்த்தாலும், தாம் பார்ப்பது ஒரு நாடகம்தான் என்பதை மறந்துவிடாதிருக்க நாடகமும் நடிப்பும் அமைய வேண்டும்".

**பேர்த் தோல்ட்**